

JPL
C12827

# ழித்திருங்கள்

நெல்லை லதாங்கி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

KOHA
JPL

பொதுசன நூலகம்
22 AUG 2019
மாநகரசபை
யாழ்ப்பாணம்

12827 CC

273071

# விழித்தெழுங்கள்

நெல்லை லதாங்கி

273072

273072 CC

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ
894.8111

நூல் : விழித்தெழுங்கள் (கவிதைத் தொகுதி)
ஆசிரியர் : திருமதி ஆனந்தராணி நாகேந்திரன்
(நெல்லை லதாங்கி)
(Music Trd, B.A. , Dip in Edu)
விலாசம் : மகாத்மா வீதி, நெல்லியடி
தொலைபேசி : 0770344614
பதிப்புரிமை : ஆசிரியருக்கு
வடிவமைப்பு : க.பரணீதரன்
வெளியீடு : ஆனந்தா
அச்சகம் : பரணி அச்சகம், நெல்லியடி.
பக்கங்கள் : 60
முதலாம் பதிப்பு : ஆவணி 2019
விலை : 200 ரூபா

Title : Vilithelunkal(Collection of poems)
Author : Mrs Anantharany Nagendran
(Music Trd, B.A. , Dip in Edu)
Copy Right : Mrs Anantharany Nagendran
First Published : 2019 August
Printer : Baranee Printers, Nelliady
Page : 60
Price : 200/-
ISBN : 978-955-53908-5-9



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

KOHA
JPL

"இயல், இசை, நாடகம்" எனும் மூன்று துறைகளிலும்
தேர்ச்சிஎல்லோருக்கும் அமைவதில்லை.
ஆனந்தராணிக்கு அது வாய்த்திருக்கிறது."
"பல்துறை ஆற்றல் கொண்ட படைப்பாளி"
"ஆற்றல், முயற்சி, ஆளுமை,
மிகுந்த தன்னம்பிக்கை கொண்ட
ஆசிரிய ஆலோசகர்"
"இவரது படைப்புக்கள் சிறந்த ஆக்கங்களென
முத்திரைகுத்தப்பட்டு பல ஆக்கத்திறன் போட்டிகளில்
வெற்றியும் ஈட்டியுள்ளது"
"நெல்லை லதாங்கியின் எழுத்துலகம்
பல முகங்களைக் கொண்டது."
இது போன்று பலவிதமான ஊக்கங்களை
வழங்கிக் கொண்டிருக்கும்
இலக்கிய கர்த்தாக்களுக்கு
இந்நூல்

**சமர்ப்பணம்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உள்ளே...

1. துடக்கு/01
2. தொல்லைபேசி/05
3. அன்னை/08
4. நேசி/10
5. மந்தை போல வாழ்வது ஏன்?/12
6. நாய்களா பேய்களா?/14
7. உம்மணா மூஞ்சிகள்/17
8. உழைப்பு/20
9. துவேசம்/22
10.எது அழகு?/24
11. நம்ப முடிகிறா? /26
12. எல்லோரும் இன்புற்றிருக்க/30
13. நாம் மாறோம்/32
14. இணைவேன் உன் மனைவியாக/35
15. அந்தரத்தில் தொங்கினவே/37
16. அன்பு செய/39
17. மறந்து வாழ/41
18. விதி விலக்கு/43
19. காதலர் தினத்தினிலே/45
20. குனிவு/47
21. விழித்தெழுங்கள்/50
22. யாரவள்/52
23. விதி சதி மதி/53



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மனப்பதிவு

நெல்லை லதாங்கியின்
நெருடல்களுக்கோர் களம்
தொல்லை அகன்று இன்னல்கள் நீக்கும்
இலக்கியம் ஒரு வளம்
சொல்லாடு களமாக
சுதந்திரமாகக் கருத்துக்களை
சுழல விட பறக்க விட எழுத்துலகோ
இன்றெனக்கு எல்லையில்லா இன்பசாகரம்

எண்பதுகளில் எழுத்துலகில் கால் பதித்து
ஏணி போல உயர்ந்து
இன்று பல பரிசில்கள் பாராட்டுக்கள்
விலை மதிப்பில்லா மாசு மறு அற்ற
வெள்ளை மனம் கொண்ட உள்ளங்களின்
ஆசிகள் ஆதரவுகள் அனைத்தாலும்
ஈராண்டுக் கொரு தடவை என் வெளியீடு என
உறுதி பூண்டது போல்
இரண்டாயிரத்து ஐந்தில் ஒன்று
இரண்டாயிரத்து ஏழில் ஒன்று
இரண்டாயிரத்து ஒன்பதில் ஒன்று
இரண்டாயிரத்து பதினொன்றில் ஒன்று
இரண்டாயிரத்து பன்னிரண்டில் ஒன்று
இரண்டாயிரத்து பதினைந்தில் இரண்டு
என ஏழு நூல்களும் புவி மீது தவழ
இறைவன் அளித்தவரம் மகத்தானது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குறுநாவல், நாடகம், சிறுகதை, நாவலென
ஆனந்தராகத்துடன் சிறுவர் சித்திரக்கதைகளையும்
செவ்வனே, அரங்கேற்ற
அவையிலே ஆளணியினர் குறைந்த வேளையிலும்
அறுவடை ஆற்றல் மிக்க இலக்கிய கர்த்தாக்கள்
முகம் கோணாது, முன்வரிசையில் அமர்ந்திருந்து
ஆற்றிய உரைகளால் தான் இன்று
விழித்தெழுங்கள்
உங்கள் கரங்களில் தவழ்கிறது
கவிதை உமக்கு வரா
எனும் கருத்தில் நானும் உடன்பட்டு
சிறிது காலம் விலகி நின்றேன்.
கருத்தை விளங்கிக் கொள்ளக்
கடினப்படும் கவிதை நான் தரவேண்டாம்
பாமரரும் படித்து உணரும் வகையில்
படிப்பினை ஊட்டும் நடைமுறைச் சம்பவங்கள்
ஏற்படுத்திய உளத்தாக்கத்தினை
கவிதை வடிவில் வெளிக்கொணர
பல வருடங்கள் முன்பே
தயக்கமின்றி வெளியிடலாம் என்று
அங்கீகாரம் தந்த ஐயாவிற்கு
மனமார்ந்த நன்றிகள்
அச்சிட்டு உதவிய பரணி அச்சகத்தினருக்கும்
எனது மனமுவந்த நன்றிகள்.

நன்றியுடன்
நெல்லை லதாங்கி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# துடக்கு

அதிகாலை ஐந்து மணிக்கு அலாரம் வைத்து
ஆலயமணி 'டாண் டாண்' என ஒலிக்க
அருண்டு சுருண்டு பதைத்து எழுந்து
காலைக் கடன்களைக் கடுகதியில் முடித்து
மூச்சிரைக்க முழந்தாள் வலிக்க
முள்ளந்தண்டு (நொந்தது) தான் கண்ட சுகம்

தோய்த்துலர்ந்த ஆடை உடுத்து
துவட்டிய கூந்தலை வாரி முடித்து
கரங்களில் பூக்கூடை தவழ
கட கட என மலர்கள் பறித்து
ஆலயதரிசனம் செய்யச் சென்றிடின்
அங்கே பல தடைக்கற்கள்

கண்கண்ட தெய்வத்திற்கும்
கரிசனையுடன் புத்திரர்களுக்கும்
நாமார்ச்சனை செய்வதற்கும்
அங்கே பல தடைக்கற்கள்

எது எப்படியோ !
பறித்து வந்த புதுமலர்கள்
பலரினது கரங்கள் மாறி
பவித்திரமாக
இறைவன் பதம் சேர்ந்ததும் தான்
"அப்பாடா" என்று
உயிர் வந்தது அடியவளுக்கு



KOHA
JPL

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பெயர் நட்சத்திரத்துடன்
பெரிதாக எழுதி வந்த
சிட்டையினைச் சேர்ப்பிப்பது எவ்வாறு?
சிந்திக்க
சோர்ந்தது மனம்
விழி திறந்து நோக்குகையில்,
வாயிலில் ஒரு கன்னி
வாங்கி உதவி செய்தாள்.
ஐயரிடம் சிட்டை
அழகாகச் சேர்ந்தது கண்டு
பட்ட கஷ்டத்தின் பாதி
குறைந்துவிட்ட திருப்தி
அவள் மனதில்

பூஜை,
தீபாராதனைகளைத் தொடர்ந்து
திக்குத்திக்காய்ப் பக்தர் கூட்டம்
தீப ஒளியை
விழிகள் வேண்ட
உயர்ந்து உயர்ந்து எட்டிப் பார்த்தாள்.
முடியவில்லை
அமர்ந்துவிட்டாள் தரையினிலே!

ஒளி காணாத் துயரினிலே
நெஞ்சம் விம்மியது
முருகா!
இதென்ன கூத்து?
ஆறறிவு படைத்த
மானிடரா நாங்கள்?
எங்குமிலாததோர்
இந்து கலாச்சாரமா?
உன் ஆலயத்தில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஊர் முழுவதும்
முருகாலயம் இருக்க
அயலிலே உள்ள குமரா
உனை விடுத்து,
பல மயில்கள் கடப்பதில்
பயனுண்டோ பாரிலென
உனை நாடி வந்தேனே!
அதற்குக் கிடைத்த
பலாபலனா இது?

உள்ளம் படும் அவலங்களை
உனை நெருங்கி உரத்து அழ
உரிமை தரா உள்ளங்களை
உன்னருளால் திருத்திடப்பா
மனம் குமுற மௌனமாக
வணங்கி முடித்து
போதும்
முருகன் தரிசனம் என்று
புறப்பட இருந்தவேளை
அருகிலே அடியவன் ஒருவன்
அன்பொழுக வழிபட்டு நின்றான்

துணை கிடைத்த மனமகிழ்வில்
பாதங்கள் நகர மறுக்க
உள்ளிருந்து வந்தான்
ஓர் நெடிய
துணை நின்ற அடியவனின்
அன்பு நண்பன்

ஏன் நண்பா
வெளியில் தரிசனம்?
ஏக்கத்துடன் நண்பன் வினவ
"துடக்கு நண்பா" எனக்கு என்றான்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

படக்கென்றது பாங்கி இவள் மனம்
மகளுக்கு மகன் பிறந்து
மாதம் ஒன்று கழியவில்லை
மகிழ்வுடன் அடியவன் தொடர
துவண்டு போனாள் வஞ்சி இவள்

ஆழக்கிணற்றில்
அள்ளி இறைத்து
அளவுக்கதிகமாய்ச் சுத்தத்துடன்
அருள் வேண்டி வந்தவளும்
துடக்குடன் நின்ற அடியவனும்
ஒன்றாகி விட்டனரே
அடியவனின் மகவின் துடக்கு
ஒரு திங்களில் முடிந்துவிடும்
ஆனால் அருள் வேண்டி வந்த
அபலையின் துடக்கு
ஆயுள் வரை தொடர்ந்திடுமே!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தொல்லை பேசி

அந்தி மயங்கும் நேரம்
அழகான இளைஞன் இவன்
அமர்ந்திருந்தான்
அவள் அருகே

அவள்,
உளம் தனைக்
கொள்ளை கொண்டு,
உருவமதை வர்ணித்து,
அவள் உணர்வுக்குத் தீனி போட்டு,
உலகமே அவள் தான் என்று,
கொஞ்சு தமிழில்
இவன் கெஞ்ச
வஞ்சி அவள் மெய்மறந்தாள்
வரமோ என நினைத்தாள்

இன்ப சாகரத்தில் அவள் திளைக்க
இருகரம் கோர்த்து மாலையாக்கி
நீள் கழுத்தில் இவன் அணிய
நிம்மதிப் பெருமூச்சொன்று - அவள்
நெஞ்சில் நிறைந்ததுவே

சுற்றுச் சூழல் தனை மறந்தாள்
சொந்த பந்தம் நினைத்துப் பாராள்
மாரடைப்பில் உயிர் துறந்த



KOHA JPL

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மணவாளனையும்
மறக்கலானாள்
அவள் உளம் முழுவதுமே
நிறைந்திருந்தது
இவன் உருவம்

முழம் முழமாய் மல்லிகையை
முகம் மலரச் சூடிய
ஆருயிர்க்கணவனின்
பசுமை மிகு நினைப்புத் தன்னை
அகம் மறக்கச் செய்த மாயை
மங்கை அவள் தானறியாள்
மந்திரமோ
என நினைத்தாள்

மாடத்தின் நடுவே
மதி அவள் சோர்ந்திருக்க
பாட்டுடனே பாங்கன் வந்து
அவள் வாட்டத்தைப் போக்க எண்ணி
தோட்டத்திலே தட்டிப்பறித்த
ரோஜாதனைச் சூடிய பாங்கு
சொர்க்கத்திலே நடக்குதென்று சொக்கி
அவள் நிற்கையிலே
பக்கத்தில் தான் அமர்ந்து
பல கதைகள் கூறி நின்றான்

வெண்புறாக்கள்
சிறகடிக்க
வெண்ணிலா மின் ஒளி பரப்ப
விண்மீன்கள் கண் சிமிட்ட
பெண்மயிலாள் நாணி நின்று
ஓதிய காதல் மொழியும் காற்றாகிப் போயினவே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தொல்லை தரும் தொலைபேசி இன்று
துரத்தியதாலா இப்பாடு
துண்டிக்க அவள் பட்டமுயற்சி
விழி இருந்தும் குருடாச்சு
நட்புக்கு மூப்பு ஒரு தடையா?
முனகியது
அவள் ஈனக்குரல்
மறக்கமுடியவில்லையே!
என ஓலமிட்டது
அவளது ஓராயிரம் குரல்
நாடி நரம்பு நாளமெல்லாம்
நாண் எனப் பாய்ந்தது
உருவமிலா
இவன் நினைவு

கண்களின் இமை மூட
காதோரத்தில் கவி பாடிய நண்பன்
அவள் உதட்டினிலே பொழிந்தது
உண்மை முத்தம் என நினைத்தாள்

விழி திறந்த அவள் தேட
விளக்கொளியில்
இவன் இல்லை
செவிவழியாய் வந்து சேர்ந்த
சிற்றின்பம் நிஜமா இங்கே

நினைவுகள் நிழலாயினும்
கணவனை இழந்த
கைம்பாவை அவள்
கற்பனையில் பறப்பதற்கு
சிறகு தந்த பரமனுக்கு
சிரம் தாழ்த்தி
நன்றி சொன்னாள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அன்னை

ஐயிரண்டு திங்கள்
அடி வயிற்றில் எனை ஏந்தி
உயிர் தந்து உருவம் கொடுத்து
உள்ளத்திற்கு உவகை ஊட்டி
அன்னமூட்டி அமுதூட்டி

இரவு பகல் விழி மூடாது.
இற்றை வரை சோராமல்
உறுதியுடன் வாழ்வதற்கு உரமளித்தவள்
என் தாய்

கருவறையில் எனைத் தரித்து
அழகாக உருவகித்து
உற்றவரின் துணை இன்றி
கஸ்டம் எனை அணுகாமல்
கண்ணை இமை காப்பது போல்
காத்து வளர்த்தவள் என் தாய்
பற்றுடன் பாசத்தையும்
இரத்தத்துடன் சேர்த்தளித்து
வித்தகனாய் நான் உயர
விளக்கங்கள் பல கூறி கற்றபடி நான் வாழ
சித்தமாய் அமைந்தவள் என் தாய்

கன்னிப்பருவமதில்
கட்டிய நாயகனை இழந்து



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காண்போர் மனசைக்
கழிவிரக்கம் கொள்ளச் செய்து

சுகம் இழந்து சொந்தம் இழந்து
சொத்து இவன் தான் என
எனைப் பேணிப் பாதுகாத்த உத்தமி
என் தாய்

அன்னையின் அடி பணிந்தால்
அவனியும் தலை வணங்கும்
அவள் உளம் வருந்திக் கொண்டால்
அத்தனையும் பொசுங்கிவிடும்

பத்தரை மாற்றுத்தங்கம்
பசும் பொன் மேனியினள்
இத்தரை மீதினிலே
ஈடு இணையற்ற அகல்விளக்கு
என் தாய்

அம்மா என்ற வார்த்தை தான்
அகிலத்தில் முதல் வார்த்தை
அதற்கு ஒப்பான
இணைவார்த்தை ஏதுமில்லை

அறிவில்லா ஜீவன் கூட
இசைத்திடும் இவ்வார்த்தை
அறிவுள்ள மாந்தர்
நாம் உணர்வோமா இவள் அன்பை

தாய்க்குப் பின் தாரம் என்ற
தத்துவத்தை உணர்ந்தோமாயின்
சந்ததிக்கும் நிம்மதியாய்ச்
சாகும் வரை வாழ்ந்திடலாம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நேசி

பாதை இருமருங்கும்
பெருப்பித்தல் வேலை நடக்க
பக்கம் பார்த்துப் பயணிப்போர்
பவ்வியமாய் பயணித்துக்கொள்ள

இயந்திர உலகினிலே
சனநடமாட்டம் அதிகரிக்க
இளவட்டங்கள் கைகோர்த்து
இணையாகப் பவனிவர

இருதயாவின் பாதம் மட்டும்
இசையோடு இணைந்து
இரு பெடல்கள் மிதித்தன காண்பாய்

குன்றும் குழியையும் மூடி
நன்றாய் விரவிச் சீராக்கி
காப்பெற் வீதி அமைத்தார்
கடுகதியில் செல்வதற்கு

அக்கதி
பலர் உயிரைப் பறித்தது
நாம் கண்ட உண்மை
கண் இமைக்கும் நேரத்தில்
விண்ணுலகம்
செல்வோரை நினைத்து



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பெண்மனது
பெரும் பீடை கொண்டதால்
புலன் ஐந்தையும்
ஒருங்கே சேர்த்து
புதிய பாதையில்
புத்துணர்வோடு சவாரி செய்தாள்
இருதயா.
இரு நிமிடம் ஆகவில்லை
சுர்ரென
துவிச்சக்கரவண்டி கைப்பிடியில்
டிப்பர் ஒன்று உரசிச்செல்ல
சுள்ளிட்டது
அவள் கைவிரல்கள்
சுற்றியது அவள் சிரசு

பேதை அவள்
அருந்தப்பு
நெஞ்சத்திலோ படபடப்பு
அவதானமற்ற சிறுவர்களாயின்
அவர்களின் நிலை ...?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மந்தை போல் வாழ்வது ஏன்

மானிடா நீ
மந்தை போல வாழ்வது ஏன்?
சிந்தை நிறை புவியினிலே
சொந்த புத்தி மறந்தது ஏன்?

தொல்லை தரும் தொலைபேசியும்
துரத்திக் கொல்லும்
சினிமாவும்
வஞ்சனை ஊட்டும்
தொலைக்காட்சி
சீரியல்களும்
வாழ்க்கைக்கு உதவிடுமா?

கூட்டுக் குடும்பம்
வேண்டாம்
குடும்பத்தில் மகிழ்ச்சி
வேண்டாம்
ஊட்டச்சத்தும் வேண்டாம்
உணர்வுகளை
மதிக்க வேண்டாம்
பாட்டனார்
வாழ்ந்த வாழ்வும்
வேண்டவே
வேண்டாம் வேண்டாம்
பாவங்களின்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிறப்பிடமாய்
வாழ்ந்தாலே
போதும் போதும்
என்ற வாழ்வு
தான் உனது வாழ்வா?

பட்டப் பகலினிலே
பாவையர்கள்
படும் பாடு
நட்ட நடு நிசியில்
நாயகிகள் படும் பாடு
கட்டிளமை காதலினால்
காதலர்கள்
படும் பாடு
கண்ணுறக்கம் இல்லாது
பெற்றவர்கள் படும் பாடு

ஐந்தறிவு
ஜீவன் வாழ்வில்
அழுகைக்கே இடமுமில்லை
சொந்த பந்தம் தனை மறந்து
சொத்துச் சேர்க்கும்
குணமுமில்லை
வெந்த புண்ணில்
வேலைப்பாய்ச்சும்
கொடூரமும் அதற்கில்லை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நாய்களா? பேய்களா?

உலகினிலே
உன்னதமான ஒன்று
உயிர் என்றாலும்
அது பட்டுழலும் பாடோ
பல்லாயிரக்கணக்கு
அதிலும்
பேதைகள் படும் பாட்டினை
அளவிட
பாரினிலே கோல் எதுவுமில்லை

கண்கள் நிதம் குளமாகும்
கன்னிப் பெண்கள்
எத்தனை பேர்
கணவனின்
வெஞ்சொல்லால்
விதி நோகும்
வேல்விழியாள்
எத்தனை பேர்
இராமன் போல் அமைவான் என்று
கனவு காண
இராவணன் போல் அமைந்து
வீட்டை நாறடிக்கும்
நாயகர்கள்
எத்தனை பேர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அடி உதை
சித்ரவதை
பல்லுடைப்பு
பண்ட பாத்திரம் உடைப்பு
இவையெல்லாம்
திருப்தி தராவிடின்
இரசித்து இரசித்து
அங்கமெல்லாம்
சூடு போடும்
கனவான்கள் தான்
எத்தனை பேர்

பெற்ற தாயின்
அன்பை மறந்து
உடன்பிறந்த
பிறப்புக்களை மறந்து
பிள்ளை போல்
எமைக்காப்பாற்றுவார்கள்
என்று நம்பி
பின் தொடர

குழந்தை பெறும் இயந்திரமும்
பணம் காய்க்கும் மரமும்
கூலியில்லாச் சேவகியும் தான்
நீ என்று
பாய்ந்து குதறும்
சீமான்கள் எத்தனை பேர்

இவையெல்லாம்
நியதியென்று
இடை இடையே
விட்டுக் கொடுத்தால்
நித்தம் ஒரே சாப்பாடா?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நிறைவு தரா மனத்தினனாய்
புத்தம் புதுச் சாப்பாட்டை
புசித்து உண்ணத் தொடங்கிடுவான்
அதன் விளைவு
பேருக்கு ஒரு மனைவி
பேச்சுக்கு ஒரு துணைவி
அன்பு செய்ய அரவணைக்க
ஆசைக்கென்று
ஆங்காங்கே பல துணைவி

சீ.... நீயும் ஒரு மனிதப்பிறவியா?
என நிமிர்ந்து
ஒரு வார்த்தை கேட்டால் போதும்
கோசமிட்டு
ஊரைக்கூட்டி
பேதை வாயை அடைத்திடுவான்

பெண்கள்
என்ன பேய்களா? நாய்களா?
கொன்று கொன்று
நிதம் அவள்
உடல் உளத்தைச் சப்பிச் சப்பி
மென்று மென்று

விழுங்கும் உங்களுக்கு
அவ் உமிழ்நீர் என்ன
வெல்லம் கலந்த
பாயாசமா?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உம்மணா மூஞ்சிகள்

முகத்திலே கடுகடுப்பு
உதட்டிலே சிடுசிடுப்பு
மூக்காலே ஒரு சுளிப்பு
நாக்காலே சிறு நெளிப்பு
கண்டுகொண்டால் ஒரு புன்சிரிப்பு

ஆகா!
அற்புதமானவர்கள் இவர்கள்

கோபமாய்ப் பேசி குணத்தை இழந்து
பாவம் சம்பாதிப்பதற்கு
படாத பாடு படுவது ஏன்?

போகவிட்டுப் புறம் சொல்லி
பேச்சினிலே
குதர்க்கம் பண்ணி
வாய் பேசாத மௌனிகளை
வதைப்பதற்கு
வரம் வேண்டி வந்தவர்கள்

வளைக்கத் தெரிந்தவர்கள்
பிழைக்கத் தெரிந்தவர்கள்
பிழைக்கத் தெரிந்துவிட்டால்
பேசியே ஜெயித்திடுவார்கள்

KOHA
JPL



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தான் உண்டு
தன் பாடு உண்டு
என்று வாழும் நியாயவாதிகள்
இத்தரணியிலே மதிக்கப்படுவதில்லை

தந்திரோபாயத்துடன்
தத்தித் தாவுபவர்களை
மதிக்காவிடிலும்
இவ் உலகம்
மதிப்பது போல்
காட்டிக் கொள்ளும்

என்னை விட்டால் யாருமில்லை
என்ற மமதையுடன்
எள்ளி நகையாடி
ஏளனம் செய்யும் கூட்டம்
ஏராளம் பாரினிலே

பிறர் மனம் நோகாது
பண்புடன் வாழ்பவர்கள்
மிதிபட்டுச் சாகிறார்கள்
பிறர் மனதினைப்
புண்படுத்தி
மனம் மகிழ்ந்து வாழ்பவர்கள்
இன்று தலை நிமிர்ந்து வாழ்கிறார்கள்

வேடிக்கையாகப் பேசி
கத்திக் கலாட்டா செய்பவர்கள்
காரியவாதி ஆகிறார்கள்
அமைதியுடன் அடக்கமாய்
ஆரவாரமின்றி
காரியம் சாதிப்பவர்கள்
காணாமல் போய் விடுகிறார்கள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அன்பொழுகப் பேசி
ஆக்கிரமிப்புச் செய்வார்கள்
அண்டிவிட்டுக் கூத்துப் பார்த்து
ஆனந்தமும் கொள்வார்கள்! ஆகா!
இவர்கள் மனிதர்கள்

அமைதியுடன் இருப்பவர்கள்
ஆளப்பிறந்தவர்கள்
அது அந்தக் காலம்
அட்டகாசம் புரிபவர்கள்
ஆளப்பிறந்தவர்கள்
இது இந்தக் காலம்

ஒன்றுமே தெரியாதவர்கள் என
மற்றவரை மட்டந்தட்டி
திறமைசாலிகள்
தாம் தாம் என
தம்மைத் தாமே புகழ்ந்திடுவார்
இவர்களைப் போல் வாழ்ந்தால் தான்
இன்றுலகில் சுகமாக வாழலாம்
இல்லையேல் பனையால் விழுந்தவனை
மாடேறி மிதித்த நிலைதான்
வந்து சேரும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## உழைப்பு

வெள்ளாப்பு வலைவீச
நடுநிசியில் தானெழுந்து
நடுக்கடலில் படகை ஓட்டி
குளிர் கூதலில் நடு நடுங்கி
உயிரையும் துச்சமென மதித்து
குற்றுயிராய்க் கொண்டு வரும்
உயிரினத்தை
அறாவிலை பேசி
அமுக்கி விடும் தரகர்கள்

பலமணி நேரம்
உழைத்த உழைப்பு
சிலமணி நேரத்தில்
பெறும் வாய்ப்பு
பலர் இங்கே முதலாளிகள்

கறண்டிலே நீர் பாய்ச்சி
கால்கடுக்க
வெய்யிலில் நின்று
மாதக் கணக்கில் பயிரை நாட்டி
பணம் நிறையும்
பெட்டியில் என்று பார்த்தால்
மலிந்துவிடும் அந்நேரத்தில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விதி என்று கொண்டு சென்றால்
தூக்கிலே
அங்கு அரைவிலை
பார்க்காது விற்றுப்
பட்ட கடனை
அடைக்க வேண்டும்.

இயற்கையின் சீற்றம் வேறு
இருவரின் உழைப்பையும்
பறித்தெடுத்து
இடர்களுக்குள்ளாக்கி விடும்.

பார்த்துப் பார்த்து வளர்த்த கதிர்
பாழடையும் சேற்றினிலே
சேர்த்து வைத்த சிற்பம் வேறு
சீரழியும் வேலியிலே
சூறாவளி சுழன்றடித்து

சுக்கு நூறாக்கும் படகுகளை
சோர்ந்து போய் இருசாராரும்
நைந்து நைந்து உருகினாலும்
இது தான் அவர்கள் சொந்தம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## துவேசம்

பெயரிலே பேரம்பலம்
செயலிலே சின்னத்தனம்
வகையிலோ உயர்ந்த இனம்

நையாண்டியும் நளினமும்
நாவிலிருந்து உதிரும் விஷமும்
நலிந்த உள்ளங்களை
விரக்திக்குள்ளாக்கி
சாகும் வரை
இட்டுச்செல்லும்
சங்கதி ஏன் விளங்கவில்லை ?

எங்கையோ கண்டனான்
என்று தொடங்கி
அங்கையோ இருக்கிறாய்
என்று வினாவி
பங்கை பார்த்தியோ

நீ அந்த இடத்திற்கு உரிய
ஆள் தான் என்று
நான் நினைச்சது சரியாய்ப்போச்சு
உறுதிப் பத்திரம்
ஆதாரத்துடன் வழங்கி,

என்னய்யா எழுதியா ஒட்டி இருக்கிறது?
சொல்லுக்கு நல்ல இனம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொல்லைப் புறத்திலே
உறண்டல் மணம்
சில்லுப் பூட்டி நடக்க வேணும்
இல்லையேல் ஓட்டிவிடும்
வாசனைத்திரவியங்கள்
பாதரசத்தினிலே

சுத்தத்தைப் பேணி வாசலில் கோலம் போட்டு
பேச்சிலே இனிமை கூட்டி
பெரும் பெரும் பதவிகள் வகித்து
பேரும் புகழும் பெற்றாலும்
மட்டம் தட்டிடுவீரே
இதைச் சொல்லி

பார்வைக்கு பக்திமயமாய்
பிராமணரோ என வியக்க
ஆசாரமாகக் காட்சி கொடுத்து,
அனைவரினதும் கவனத்தை ஈர்த்து
அன்பொழுக அரவணைத்து
ஆசுவாசப்படுத்தினாலும்
அவர் அவர் தான்
முத்திரையும் குத்திடுவார்

மனிதனை மனிதன் சரிசமமாக
மதிப்பது நம் கடமை
உரக்க உரக்கப் படித்துவிட்டு
பாதியில் மறந்து பச்சோந்தி போல்
மாறும் குணம் ஏனய்யா இன்றுனக்கு?

பிறப்பு என்பது என்ன
கேட்டு வாங்கவா முடியும்?
அல்லது
கேட்டு வாங்கி வந்தவார்களா நீங்கள்?

ஏனய்யா இந்தத் துவேசஷம்?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எது அழகு ?

இயற்கையாய்
அள்ளி முடிந்து
இடையிலே
குடம் தவழ
நடையிலே அன்னத்தை மிஞ்ச
தொடை தெரியா உடை அணிந்து
தோகை மயிலாள்
தோன்றிய காலம் வேறு

அம்மியிலே
மஞ்சள் அரைத்து
மேனியெல்லாம் பரவிப் பூசி
இயற்கையான வனப்பெய்த
எலுமிச்சைத் தோலினாலே
இளந்தோலை மசாஜ் செய்து
மட்டமாய் நகத்தை வெட்டி
மருதாணியிலே நிறம் சிவக்க
மாரடித்த காலம் வேறு

வதனமெல்லாம்
கிறீமை அப்பி
வடுக்கள் மறைய
வர்ணம் பூசி
பொடிக்கு ஒரு கிறீம்
பொழுது சாய ஒரு கிறீம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வருடம் செல்ல
தோல் சுருங்கி
வதனமெல்லாம்
வரண்டு போகும்
அழகெல்லோ
கொள்ளை அழகு

உதட்டுக்கு ஒரு சாயம்
பரட்டை முடிக்கு
இன்னோர் சாயம்
கருவிழிக்கு கறுப்பு மை
இமை வெட்டி மூட இளஞ்சிவப்பு
இளையோரைக் கிள்ளி விளையாட
இரண்டு இஞ்சியில்
நகம் வளர்ப்பு
இத்தனையும் இல்லாவிடில்
ஏன் இந்த மனிதப்பிறப்பு?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நம்பமுடிகிறதா

அன்று வாசலில் வசந்தி நின்று
வந்திட்டுப்போ சாம்பவி
என்றாள்
ஏன் வெளியிலை
உள்ளை வாவன் என்றேன்

ஐயோ ஆரும் பார்த்திட்டால்....
அடக்கி அவள் வாசிக்க
புரிந்து கொண்டாள் சாம்பவி

அக்கம் பக்கம்
அரைக் கண்ணால் சுழல விட்டு
ஒருவருமில்லை
உள்ளை வா என்றேன்

வீட்டுத்திண்ணையில்
வசந்தி
விடாப்பிடியாய் நின்று கொண்டாள்

போன வாரம் வந்து
விருந்தெல்லாம் உண்டு விட்டு
இப்ப என்ன
'துடக்கோ' என்றேன்

இல்லை...
பக்கத்து வீட்டுப் பவளமக்கா
பார்த்தபடி நிண்டவா



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உன்ரை வீடு
தெரியவே தெரியாதெண்ண
வீட்டையும் காட்டி விட்டா
பண்பான படித்த பிள்ளை
நீ கூசாமல் போகலாம் எண்டா

உங்களுக்குத்
தெரியும் தானே
உள்ளை போனால் என்ன...
தள்ளி வைச்சிடும்
எங்கடை சனம்...

எண்டெல்லாம் கூறியிட்டன்
அதாலை தான் யோசிக்கிறன்

சரி சரி வந்த விசயம் தான் என்ன?

வங்கியிலை லோன் எடுக்க
சைன் ஒண்டு உன்ரை வேணும்
அதுதான்...
என அவள் இழுக்க

மறுக்க மனமின்றி மறுநாள்
பாப்போம் எனக்
கூறி முடிக்கு முன்பே

மறந்திடாதை என்று விட்டு
மடமட வென ஓடிவிட்டாள்
வாய் வரை வந்த சிரிப்பை
வாய்க்குள்ளேயே அடக்கிக் கொண்டு
வருடக்கணக்காக பழகிய நட்பை
மீட்டி கொண்டாள் சாம்பவி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

படிக்கும் காலத்திலேயே
பாரதி வீட்டை போறன் என்று
பொய்யுரைத்து
பெற்றோரை நம்ப வைத்து
அவள் வீட்டில்
உண்டு மகிழ்ந்த
ஆருயிர் நண்பி

இருபதாம் நூற்றாண்டில்
இவ்வாறு ஒரு நண்பி -
நம்ப முடிகிறதா?
முப்பது ஆண்டு சென்றும்
மாறாத உந்தக் குணம்
மாறிடுமா சுடலை வரை

**காலங்கள் உருண்டபோது,**

வாசலில் காலடி வைத்தால்
வரட்டுக் கௌரவம் போய்விடுமே

நின்ற நிலையில் உரைத்து விட்டுச் சென்ற
உற்ற தோழி வசந்தி இன்று

விறாந்தைச் சோபாவில் அமர்ந்திருந்து
வினயமாக அளவளாவி ரீ குடித்து
கட்டாயம் வந்திடு என்று
அழைப்பு ஒன்றை நீட்டி
அழைத்த விதம்
காலத்தின் கட்டாயமோ?

ஆருயிர் நண்பியிடம்
ஆழ் மனதில் புதைந்த எண்ணத்தை
மகிழ்வுடனே பகர எண்ணி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மூத்த மகனின் திருமணத்தில்
முறைக்குக் கூட அழைப்பு இல்லை
முரண்பட விருப்பு இன்றி
காலத்தின் மாற்றமோ! வசந்தி இது என்று
ஒரு வரியில் வினவி நின்றேன்.

கண்கள் பூரியக்க
கன்னம் சிவந்து குழி விழ
உதடுகள் உலர்ந்து ஆட்டம் காண
உமக்கென்ன விளங்காதோ?
பிள்ளையள் வளர்ந்திட்டினம்
அவர்களுக்கென்று ஒரு நண்பர் கூட்டம்
மண்டபத்தில் மணி மூன்று வரை நிற்பம்
அங்கு வந்தால் சிறப்பு என்றாள்

சிறப்புத்தான் சிறப்புத்தான்
எங்கே இவள் வீடு வரை வந்து
இனசனம் முன்னால் நின்று விட்டால்
வரட்டுக் கௌரவம் என்னாவது?
புரிந்து கொண்டவளாக
கையிலே மூன்று அழைப்பு
இருந்தாலும் முயற்சிக்கிறேன்
விடை பெற்றாள் நண்பி அவள்.

பொதுசன நூலகம்
22 AUG 2019
யாழ்ப்பாணம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எல்லோரும் இன்புற்றிருக்க

சுய இன்பம் நிஜமானால்,
சுற்றங்கள் மகிழ்ச்சியுறும்
அது கண்டு அவனி எல்லாம்,
ஆழ்ந்திடுமே வையகத்தில்
யாம் பெற்ற இன்பம்,
பெறுக இவ்வையகம் என்ற
நல் வாக்கு நினைவிருப்பின்,
வேதனை பிறர்க்கு இல்லை
சோதனை மிகுந்த வாழ்வு,
சொல்லாமல் ஓடி விடும்.

வாதம் வம்பு வழக்கென்று உலையாமல்,
வாழ்ந்தாலே போதும்
மீதம் பழி பாவம்
மாயமாய் மறைந்து விடும்
ஆதலால் மானிடா நீ
தானதருமம் செய்து
தாங்கொணா பசி பிணி
தீர் போதும்
தரணியும் பொலிவு பெறும்,
மனிதமும் மகிழ்ச்சியுறும்
வேதனை மிகுந்த வாழ்வு
வெகு நொடியில் பறந்து விடும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒழுக்கமே உயர்வு தரும்,
என உலகில் பறை சாற்றி
ஓய்வின்றி பொழுதினை,
ஒழுங்கமைய அமைப்போமாயின்
தீமைகள் பறந்து போகும்,
தீயரும் நமை நெருங்கார்
பாங்கான சமூகமதை,
பாரினிலே யாம் சமைத்தால்
ஓங்கிடும் இன்பம் எல்லாம்,
தேங்கிடும் வெள்ளமாக,

கல்வி கரையில கற்பவர் நாட்சில,
எனும் குறள் வழிதனில்
விருப்புடன் யாம் பயின்று,
வெற்றி பல பெற்றோமானால்
செருக்குகள் எமை அண்டா,
சேதங்கள் நமை நெருங்கா
பொறுப்புடன் மேதையாகி,
பொன் அணி மாடம் அமைத்து
பாரின்புறும் மாந்தனாய்,
யாம் மாறுவதில் ஐயமில்லை .

இனமத பேதம் தனை மறந்து,
ஈருடல் ஒருயிர் போல்
இணைபிரியா நண்பர்களாய்,
இருகரம் தனைக் கோர்த்து
சாந்தி சமாதானம்,
சமத்துவம் பூண்டு நின்று
காந்தியின் அகிம்சை வழி,
கால் பதித்து நிற்போமானால்
ஞாலமும் இன்புற்றிடும்,
நமை ஈன்ற பெண்மையும் அகமகிழும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நாம் மாறோம்

உள்ளே ஒன்று
உதட்டிலே இன்னொன்று

முகத்திற்கு முன்னால் ஒன்று
முதுகுக்குப் பின்னால் ஒன்று
கண்டால் ஒன்று
காணாவிட்டால் ஒன்று
அடுக்கிக் கொண்டே போகும் வண்ணம்
அமைந்தது தான் இன்றைய வாழ்க்கை

பார்வைக்குப் பண்பாகப்
பழகிக் கொள்ள இனிமையாக
நாக்காலே நயமாக
உரைத்து விட்டால் போதுமா?

பிற நாட்டில்
பிறர் அறியாமல்
ஒரு கட்டிலில் படுத்துறங்கி
ஒரு கோப்பையில் உணவருந்தி
ஒரு போர்வையால் இறுக மூடிக்
கொஞ்சிக் குலாவிக்
கொண்டாட்டம் போட்டுவிட்டு

சொந்த நாட்டிற்கு வந்துவிட்டால்
ஒட்டி விடுமா அவர்கள் பிறப்பு?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தொற்றிக் கொள்ளத் தான்
அவர்கள் என்ன தொற்று நோய்க் கிருமிகளா?

தாகத்திற்குத் தண்ணீர் கொடுக்க
தகரடப்பா தேடுவார்கள்
கிணற்றிலே தண்ணீர் அள்ளின்
எட்டிப் பறிப்பார் வாளியினை
கொட்டும் மழை என்றாலும்
கோயிலினுள் உள்ளை விடார்

பைபிளைப் படித்துவிட்டு
பாரபட்சம் உயிர் மூச்சு என்பார்
கீழ் சாதி அழைப்பு விட்டால்
போவேனோ
அவ் அழைப்புக்கென்பார்

உங்களுக்குத் தெரியுமோ
அந்த ஒழுங்கை மண் பட்டால்
பாதங்களுக்கு அலேஜிக் என்பார்
ஆனால்
கல்வியிலோ தகைமையிலோ தாமெல்லாம்
சிகரம் என்பார்

தெருவிலே
அடிபட்டு வீழ்ந்தால்
தெரியுமோ அங்கே சாதி
எளியவன் தூக்கிப் பறித்து
இயலுமெனின்
தன் உதிரத்தையும் கொடுத்து
விழி திறக்கும் வரை
வாயிலில் காத்து நின்று
சேவையும் புரிந்திடுவான்

KOHA
JPL



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஏலம் போட்டு என்ன
உயிரைக் காத்திடவா முடியும்
உயர் சாதியினரா உதிரத்தை
தானம் செய்கிறார்கள்?
உயர் சாதியின் உதிரமா
பிளட் பாங்கில் தேங்கி இருக்கிறது?

இறைவனின் கருணை
உறையும் உதிரத்தில்
வேறுபாடு காட்டவில்லை

சாதி இரண்டொழிய
வேறில்லை என்று
ஔவை பாடியென்ன
பாரதி பாடியென்ன
நாம் மாறோம் என்று
அடம் பிடிக்கும் கூட்டத்திற்கு
ஏன் இந்த மனித வாழ்க்கை?

சேற்றுக்குள்ளே தாமரை போல்
இருப்பவர்கள் விதிவிலக்கு
இவ்வாறு
வீட்டுக்கு ஒருவர்
உளாரெனில் போதும்
நீங்கி விடும்
நம் வாழ்வின்
ஏற்றத்தாழ்வு.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இணைவேன் உன் மனைவியாக

காதலுக்கு வயதில்லை
கற்பு என்பது இன்றில்லை
கண்டவுடன் காதல் கொண்டு
கிடைத்த இடத்தில் இன்பம் நுகர்ந்து
அதிவேட்கை கொண்டவனாய்
அவளிடத்தில் நெருக்கம் கொண்டான்

புற அழகில் மனம் மயங்கி
அவள்
உடல் அழகைப் பருக எண்ணி
தமக்குத் தமக்குத் தானே
துரோகம் இளைத்து
தடம் புரளும்
வாழ்வும் ஒரு வாழ்வா

அச்சம் மடம் நாணம் பயிர்ப்புப்
பேணி
நாற்பது வரை வாழ்ந்து
கன்னி கழியாமல் காத்து
காம வலையில் வீழ்ந்து விட்டாள்
ஆசை காட்டி மோசம் செய்யும்
ஆர்வம் இருவருக்குமில்லை
ஆயினும் ஏதோ ஓர் ஈடுபாட்டின்
உந்துதலால்
இடம் ஒன்று வசமாகியது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தாகமும் வேகமும் அதிகரிக்க
ஆசையாய் அருகருகே அமர்ந்து
அவள் விழியை நோக்கியவன்
அச்சத்துடன் விலகி நின்றான்
அவன் விலகல் அவளுக்கும்
ஓர் வகையில் நிம்மதி
ஆயினும்
ஓர் பரிதவிப்பு
கைக்கு எட்டியது
வாய்க்கெட்டாத நிலை

அருகமர்ந்து
அவன் தலை தடவி
ஆனது என்ன என
கயல் விழியாள் அவள் நோக்க
எனதருமை மனையாள் வதனம்
உன் வதனத்தில் கண்டேன்
மனம் கலங்கிக் கூறி நின்றான்

உள்ளத்தில் உவகை பொங்க
அவன்
கரங்களைப் பற்றியவள்
கண்ணிலே ஒற்றிக் கொண்டாள்
உன்னைப் போல்
உத்தமர்கள்
உலகெங்கும் உளார்களெனின்
மாதரின் வாழ்விலே
என்றுமே துன்பமில்லை
இன்னொரு பிறப்பு உண்டேல்
இணைவேன் உன் மனைவியாக

இருவரும் உடலால் மட்டுமல்ல
உளத்தாலும் விலகிக் கொண்டார்கள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அந்தரத்தில் தொங்கினவே

ஓடி ஆடி உலாவி
ஓய்வின்றிப் பொழுதினை
உற்சாகமாய்க் களித்த கன்னி அவள்
உருக்குலைந்து படுக்கையிலே
உறங்காமல் விழித்திருக்கும்
காரணம் தான் என்னே ! என்னே !

வன்னியிலே போர் முழ
வகை தெரியாது சொந்தம் தவிக்க
வழி சொல்கின்றேன் தான் என்று
உதவிக்கரம் நீட்டி
அழைத்துச் சென்ற மறு நிமிடம்
உடன் வந்த உறவுகள் பலரும்
உருக்குலைந்தார் அவ்விடத்தில்

அந்நிலை கண்டு அதிர்ச்சியிலே
அவள் உளம் நெருப்பாய்த் தகிக்க
புயங்களிலே பெரும் வலி
அவ்வலியையும் சகித்து
அரவணைத்துக் கட்டித்தழுவி
அழுது புலம்பிடுவோம்
என்று
தன் தோளை அசைத்துப் பார்த்த போது
அவள் இரண்டு கரமும் அங்கே
அங்கொன்றும்



KOHA
JPL

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இங்கொன்றுமாய்
அந்தரத்தில் தொங்கினவே

மெய்யெல்லாம் சிலிர்த்துக் கொட்ட
விழிகள் செந்நீரைச் சொரிய
குற்றுயிரும் குலையுயிருமாய்
துடிதுடித்த உறவுகளைப்
பார்க்க
விழியை மட்டும்
ஏன் விட்டுச் சென்றாய் ஆண்டவா?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அன்பு செய

வாழ்வா சாவா என அல்லாடி
வந்த துயர் அனைத்திலுமே
வெற்றி வாகை சூடி
வீற்றிருந்த வேளையிலும்
மன ஓரத்தில் பெரும் வலி

அவ்வலி துடைக்க
அவள் முன்னே ஆர்வருவார் என
- ஒரு கணம்

ஆர்ப்பரித்த நேரத்திலே
வந்தான் ஒரு கையில் வேலுடன்
தந்தான் அவன் அன்பு தனை

நிலையிலா அவன் அன்பில்
கட்டுண்டு நெஞ்சம் குளிர்ந்து
வள்ளி தெய்வ யானையுடன்
வாசுகி எனையும் ஏற்று
ஆசை வார்த்தை பேசி
அகமகிழச்செய்வது
உன் கடமை என
அவள் உரைக்க

வார்த்தை மட்டும் சுகம் தருமா
- வஞ்சியே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வேண்டும் அந்த இன்ப சுகம்
வினயமுடன் நீ அளித்தால்
பூவலகில் நாம் பிறந்த
பிறப்பின் அர்த்தம் தெரிந்திடுவோம்
முடிவுரையாய் அவன் கூற
பொறுமை கடந்த பொற்பாவை

போதுமப்பா உன் தயவு
அன்பு செய்ய அவனியிலே
ஆருமிலர் என ஏங்கி
மனமொடிந்த வேளையிலே
நல்ல நட்பு நீ செய்தாய் என
மங்கையான் மகிழ்ந்திருந்தேன்
-ஆனால்

நீயோ
காமப்பேய்
காதலுக்கும் காமத்திற்கும்
வேறுபாடு தெரியாத
காமுகனா நீ?

மனம் புண்பட்டு
நொருங்கி நிதம் சாக
வைப்பதுவா உன் நேர்த்தி?
பழகிய பாவத்திற்கு
இதுவா உன் பரிகாரம்?

போதுமய்யா உன் தயவு
வள்ளி தெய்வானையுடன்
மனம் மகிழ வாழ்ந்திடு நீ


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மறந்து வாழ

நினைப்பினில் ஒரு சுகம் உண்டு
மன்னவா
நின் கவியழகில் எனை மறந்தேன்
வாரம் ஒருமுறை நின்கவி
என் செவிகளைக் குளிர்விக்க
அரும்பாடு தனைப் பட்டேன்
நீயும் மறுப்புச் செய்யாது
குரல் கொடுத்து விட்டாய்

அக்குரல் தந்த துணிவினிலே
அவசரம் செய்தேன் பாவி யான்
ஒருபுறம் உன் நிலையறியாது
உனக்கிழைத்த தொந்தரவு
உனை மட்டுமல்ல
எனையும் வாட்டி வதைக்கிறது
நிஜம் காண்பாய்

ஏனோ நீ கோபமாய் உரைக்க
ரோசம் எனக்கில்லையா என
நெஞ்சிற்குள்ளே
பட்டாசு ஒன்று
பற்றி வெடித்தது காண்பாய்

விரக்தியுறும் என் மனசிற்கு
உற்ற துணையாகும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உன்கவி என்ற
உறுதியும் பொய்யாயிற்று

தினங்கள் சில செல்ல
குரங்கு மனம்
குழப்பங்கள் சில செய்தாலும்
முடிவினில் மாற்றமில்லை

பார்க்கும் இடமெல்லாம்
நிமிர்ந்த நின் நிழல் தோற்றம்
தோன்றிடினும்
கேட்கும் ஒலிகளெல்லாம்
நின் கவியின் சுகந்தம்
கேட்டிடினும்
உறுதி பூண்டேன் நின் கவியை மறந்து வாழ



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## விதிவிலக்கு

அலைகள் அள்ளித்தெறிக்க
ஆரவாரமற்ற சூழல் ஆக்கிரமிக்க
கலங்கிய விழிகளுடன்
கரையோரத்தில் காளை ஒருவன்
ஏதோ ஓர் மூலையில்
இருக்கின்றான் என எண்ணி
கண்மூடி உணர்வாலே
கடற்காற்றைப் பருகிக் கொண்டாள்

அரை நொடி ஆகவில்லை
அன்ரி என்றான் அருகில் வந்து
அறிமுகமில்லா ஆடவன் அவன்
அன்ரியைத் தெரியுமா என்று
அறிமுகத்துடன் பீடிகை போட்டு
அவன் பின்னணியைச் சரியாய்க் கூற
அவளும் அகமகிழ்ந்து
அன்னை போல் உரையாடலானாள்

வெந்து வெந்து உளம் புழுங்கி
நொந்து நொந்து உடல் சோர்ந்து
பந்து போல உருட்டப்பட்ட
சோக வரலாற்றை
சுயசரிதையாய்க் கூற
அவன் வசம் இரங்கிய
அன்னை ஆறுதல் வார்த்தை கூறி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தேறுதல் அவனைச் செய்தாள்
பாதகன் மனதினிலோ
பற்றியது காம உணர்வு
ஒரு கணம்

மெய்சிலிர்க்க உணர்ந்து கொண்டாள்
தன் பரிதாப நிலை தன்னை
பிள்ளைக்கு ஒத்த வயதினன் என
பேதை மனம் கலங்கி
அவன் துயரில் பங்கு கொள்ள
பாவி இவன் மனதில்
பாசம் என்ற பதம்
வேஷமாகிப் போயினவே

சொல்லித் திருத்தி வாழ வைக்க
சொந்த மகனா அவன் ?
எடுத்தெறியவும்
ஏனோ அவள் தாய்மை
இடம் கொடாதினும்
வம்பை விலை பேசி வாங்க
விரும்பாத மனத்தினளாய்
மனம் கல்லாக
கும்பிடு ஒன்று போட்டு விட்டு
அவ்விடத்தை விட்டு
விலகிக் கொண்டாள்

273072

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## காதலர் தினத்தினிலே

காதலர் தினத்தினிலே
கண்ட ஒரு காட்சி
கண் மூடினும் துயிலவிடாது
கலங்க வைக்கும் காரணம் தான்
என்னே! என்னே!

தாய்மை என்ற ஒரு காரணமா?
இல்லை ஆசான் என்ற மறுகாரணமா?
இல்லை
வளர்ந்த வளர்ப்பின் பிரதிபலிப்பா?

பிள்ளைகளின் கல்விக்காக
பெற்றோர் உருக்குலைய
பெற்றோலை ஊற்றி ஊற்றி
பெண் பார்க்கும் படலம் இன்று
வற்றாத ஊற்றாச்சு

பெண்களுக்கு சம உரிமை
சம அந்தஸ்து வேணுமென்று
கல்வியை ஒரு கருவியாக எண்ணி
பற்பல தனியார் நிறுவனங்கள்
தனி வகுப்புகள்
விசேட வகுப்புகள்
என பெற்றோர் வழிகாட்டும்
நிலை இருக்க



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கண்ணுக்கெட்டாத தூரத்தில்
காதல் லீலை செய்யும் கன்னிப் பெண்ணுக்கு
இன்னோர் கன்னிப்பெண்
மென் பாதங்கள்வலிக்க நின்று
காவல் செய்யும் கலாச்சாரம்
வேடிக்கை தான் என்றாலும்
உங்கள் கண்களுக்கு இவை உறுத்தவில்லையா?

காதல் செய்யக் கடற்கரையை
இறைவன் எழுதி வைத்திக்கிறான்
என நினைப்பவரும் உலகில் இருக்க
கண்ட கண்ட தெருக்களிலும்
கழிவகற்றும் ஓடைகளிலும்
காதல் செய்ய
நீங்கள் என்ன பிறவிகளப்பா?
மானிட பிறவிகள் தானா?
கண்டும் காணாது தெரிந்தும் தெரியாது
எமக்கென்ன என விலகிப் போக

இரும்பாலான பொதுநலமற்ற இதயமா
உமக்கு இறைவன் தந்தான்
இல்லைத் தட்டிக்கேட்டு
ஆவதொன்றுமில்லை என்ற அந்நியமா?
எது எவ்வாறாயினும்
சந்ததிகள் எவர்க்கும் உண்டு
சற்று சிந்தியுங்கள்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## குனிவு

நீண்ட பயணம்
நினைக்கையில் முக்குளிப்பு
உறங்கியும் பழக்கமில்லை
கடிகாரத்தில் மணியும்
கடுகளவும் நகரவில்லை
காற்றின் சுகந்தத்தை அநுபவிக்க
ஜன்னலைத் திறந்தால்
சாத்து சாத்து என
வலதிலிருப்பவரின் நச்சரிப்பு

உடலும் உள்ளமும்
ஒருங்கே விரக்தியுற
இடது அருகிலே
அம்சமானஅஞ்சலை ஒருத்தி
ஆடி அசைந்து
மிதந்து எழுந்து
சடின் பிறேக் போடும் போதெல்லாம்
அங்கங்கள் தொடும் வண்ணம்
அங்கங்கே உரசல்கள்

இதமான உரசல் தொடர
இரவு வந்தது தெரியவில்லை

அவள் தந்த துணிவினிலே
அவரசம் காட்டியது அவன் உணர்வு
காதிற்குள் குளிர் ஏறாமல்
ஸ்காவினால் மூடிக்கட்டி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கண்ணுக்கு அழகாய்க்
கண்ணாடி அணிந்து
கண்சிமிட்டும் அவள் அழகை
அள்ளி ரசிக்க முடியாது
அணைந்து ஒளிரும் விளக்கொளிகள்

உறங்குவது போல் பாசாங்கு (செய்கிறாள்)
என உரிமையைத் தனதாக்கி
பிரேக் போடாத நேரமும்
பஸ் சரியாது ஓடும் நேரமும் கூட
சாய்ந்து கொண்டான் சந்தோஷமாக

திடீரென மின்குமிழ்கள் ஒளி பெற
தொலைக்காட்சியும் நிறுத்தப்பட
அருகிலே குறட்டை ஒலி
ரீங்காரமாக ஒலி எழுப்பியது
ரீ குடிக்க, சாப்பிட
பாத்ரூம் போக
இறங்குங்க இறங்குங்க
இணைந்து குரல்கள் ஒலிக்க
எழுந்து கொண்டான்

அம்மம்மா எழும்புங்கோ
அடுத்த சீற்றில் இருந்த
ஆடவன் அருட்டிக்கொண்டான்
அம்மணியை
அம்மம்மா
என்ற அழைப்புக்கேட்டு
விழித்துக்கொண்ட அம்மணி
முக்காட்டை விலக்கிக் கொண்டாள்

கறுப்பு முடி ஒன்றை
விரல் விட்டுத் தேட வேண்டும்
விளக்கொளியில் வெண்முடியின் பளபளப்பு
மேலும் பிரகாசித்தது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

KOHA
JPL

சாற்றுவாய் வேறு
நாற்றத்தைக் கிளப்பியது
குமட்டிக் கொள்ள
குனிந்தபடி எழுந்து கொண்டான்

பிறர்
கண்டு கொண்டால் மட்டுமா
குனிவு வரும்

மானமுள்ள மனிதனுக்கு
மனம் கூசினாலே போதும்
தலை
தானாகவே குனிந்து கொள்ளும்

பயணத்தை சுகமாய் அநுபவிக்க
சுவைக்க
தெரிவுகள் பல இருக்க
பயனில்லாத் தெரிவால்
யாருக்கு என்ன பயன்?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விழித்தெழுங்கள்

அறிவு ஆற்றலொடு அறநெறி சார்ந்த கல்வி
ஆன்றோர்கள் பேணிக்காத்த மரபார்ந்த அம்சங்கள்
சீரிய நற்பழக்கமும் நேரான சிந்தனையும்
கூரிய ஆயுதமாய் குவலயத்தில் விளங்கிடுமே

மதுவை ஒழித்து மாதரை நற்சிநேகிதியாய்
அவள் மானம் காத்திடும் ஆசார மாணிடனாய்
போதை தலைக்கேறிப் போகாமல் மனம் இறுக்கி
பெண் பாவைகள் உலாவர புனிதனாய் உதவிடுவாய்

துஷ்டராய் பூவலகில் வாழ்வது ஒரு வாழ்வா
இஃதினை உணரச் செய்ய இரு கரம் கோர்த்து நின்று
பகுத்தறிவைப் போதித்துப் பட்டறிவை அழித்து நின்றால்
கெட்ட இனம் ஒன்று கட்டவிழ்ந்து விடாது உண்மை

கலாச்சாரம் பண்பாட்டை காலமது மாற்றினாலும்
சீலமாய் வாழ்ந்திட சிறந்த நற்பழக்க வழக்கங்கள்
ஆங்காங்கு துளிர்க்க வைக்க ஆர்வலர்கள் பலர் இருந்தால்
மேலான சமூகம் ஒன்று மேதினியில் வலம் வரும் பார்

கண்டதே காட்சி கொண்டதே கோலம் என
கட்டிளம் காளையர்கள் போட்டி போட்டு நின்றாலும்
கெட்டித்தனமாக அவன் உளத்தைப் பண்படுத்தின்
வெட்டியாய் ஊரைச் சுற்றும் தன்மையது மாறி விடும்.

273072



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பெயரைக்கெடுப்பதற்கு பேஸ்புக் வட்ஸ் அப்
பொழுதைக்கழிப்பதற்கு மெசன்சர் சாராய பார்
இவற்றில் தம்மை இணைக்காமல் சிலர் இருந்து விட்டால்
பேடிகள் இவர்கள் என பரிகாசம் செய்திடுவார்

கொட்டமடித்து கொழுப்பேற ஹோட்டலில் உணவு உண்டு
கெட்ட சகவாசங்களுடன் ஒட்டி உறவாடி
சிறுகச் சிறுகப் பெற்றோர் சேர்த்த சொத்தை
சீரழிப்பது என்ன நியாயம்?

கொண்டா சுசுக்கி யமகா வெகோ சுப்பர் கப் என
கொண்டைப்பிடியாக அடம் பிடித்து வாங்கி
அசுரவேகத்தில் அசட்டுத்துணிவுடன் ஆரம்பித்த பல பயணம்
அரை குறையில் முடிந்த கதைகள் பல உண்டு பாரினிலே

பெற்றோரை வணங்கி வாழ்தல் பெரியோரை மதித்து வாழ்தல்
கற்றோரை ஒழுகி வாழ்தல் உற்றோரைப்பற்றி வாழ்தல்
உறுதுணையாய் உதவி செய்தல் ஒப்பற்ற செயல் அன்றோ
அதுதவிர ஊறு விளைவித்தல் உவப்பான செயல் இல்லை

தீயவற்றை விலக்கி நல்லவற்றில் நாட்டம் செலுத்த
ஆறாம் அறிவு என்ற ஒன்றை மாந்தர்க்கு வாரி இறைத்தும்
ஐந்தாம் அறிவுடைய ஜீவனைப்போல் உலா வருதல்
அழகாகுமா? இளைஞர்களே விழித்தெழுங்கள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யாரவள்

பக்கத்து வீட்டுப்பருவக் குமரியவள்
பார்க்கும் வேளை எல்லாம்
பரவசமாய்க் காட்சி கொடுப்பாள்

நாளோரு மேனியும் பொழுதொரு வண்ணமுமாய்
நாணிக்கோணி தலை சாயாமல்
நெஞ்சு நிமிர்த்தி அவள் நின்ற வேளையிலே
அவள் அழகு தான் என்னே என்னே!

கல்லோ அவளைத்தாங்கி காற்றலையில் அசையும் போது
அடுத்தவர் அறியாது ஆறிவிடும் என் பசி
கதகதப்பான அவள் வளர்ச்சி கண்டு
கனத்த நெஞ்சினிலே கனவு காண
காணாமல் போனாளே கன்னி ஒரு நாளில்
கவலையிலே நாட்கள் ஓட கலங்கிய விழிகளுடன்
மீண்டும் எட்டிப்பார்த்தேன்
என்ன அதிசயம்! மனம் குளிர் விட
அவளை ஒத்த பல குமரிகள்
அங்கங்கே காட்சி தந்து அதிசயிக்க வைத்து விட்டார்கள்
தினுசு தினுசாய்த் திரட்சியுடன்
மகுடிக்குக் கட்டுண்ட அரவம் போல
ஆடி ஆடி அசைந்த தோற்றம்
மீண்டும் என் மனவானிலே சிறகடிக்க வைத்தது
அவள் நினைவு
அவள் காலம் முடியும் வரை
அவன் ரசிப்பான் அவள் அழகை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விதி சதி மதி

காலம் காலமாய்
மாளுது மனித உயிர்கள்
காவு கொள்வதற்கோ
யமதர்ம ராஜனுக்குப் பல வழிகள்
இரண்டாயிரத்து நான்கில்
விதி தன் விளையாட்டை ஆரம்பிக்க
இழந்தோம் பல்லாயிரம் உயிரை
தினம் தினம் பொங்கிக் களித்திடும்
கடல் தாய்க்கு அன்று நடந்ததென்ன.
இனிமை தரு கடலோசையோ அன்று
இள நெஞ்சங்களை அஞ்சி நடுங்க வைத்து
பரம்பரை சொல்ல ஆள் இல்லாது
பறித்த உயிர்கள் கணக்கில் இல்லை.
விதியின் விளையாட்டு இவ்வாறிருக்க

சதி தனது வேலையைச் சடுதியாய்த் தொடர்ந்தது
ஈவு இரக்கமின்றி கொன்று
குவிக்கப்பட்டது தமிழ் இனம்
அங்கவீனம் ஆயினர்
அடையாளம் இல்லாது உருக்குலைந்தனர்.
கண்கள் இருந்தும் குருடாயினர்
காதிருந்தும் செவிடாயினர்
பணமிருந்தும் புசித்திட உணவின்றி
பசியால் வாடினர் பல நூறு பேர்
அரிசியோ கிலோ ஆயிரம்
அரைப்பட்டினி, கால் பட்டினி முழுப்பட்டினி என்று

பொதுசன நூலகம்
22 AUG 2019
யாழ்ப்பாணம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உயிர்கள் ஊசலாட மிஞ்சியதோ கொஞ்ச இனம்.
சதியின் விளையாட்டு ஒரு முடிவுக்கு வர
மதி தனது மனோபலத்தை வென்று கொண்டது
மதியினால் அடைந்த துயருக்கும்
விதிமேல் பழி போட்டனர்...
பெற்றோர்
எது எப்படியோ

சாதனை வீரர்கள் தம்தம் புதல்வர்களென
பெற்றோர் அக மகிழ்ந்து
சவாரி செய்ய டிஸ்கவர், பசன் புறோ அப்பாச்சி பல்சர் என
தரம் மிகு மோட்டார் சைக்கிள்களைத் தாமாக உவந்தளித்தார்

முடிவு எதுவாக இருக்கும்?
மோடு சொல் வழி கேட்குமா?
தன் வழி தானே இழுத்துச் செல்லும்
இதனாலோ என்னவோ மோட்டுச் சைக்கிள் என்றும்
செவி நயக்கக் கூறிடுவார்

இறுதியில் கண்ட் பலன்?
கணக்கிட முடியாத விபத்துக்கள்
தினம் தினம் எண்ணிலடங்கா உயிர் பறிப்பு
இவற்றிற்கோ தீர்வு தேடின்...?

KOHA
12827 CC
273072
பொதுசன நூலகம்
22 AUG 2019
யாழ்ப்பாணம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



**நெல்லை லதாங்கி சமூகம் பற்றிய பிரக்ஞை உடைய கவிஞர்**

போர் ஏற்படுத்திய பேரழிவு, பொறுப்பில்லா இளைஞர் ஏற்படுத்தி வரும் சீரழிவு, சாதியத்தின் சில கட்டுக்கள் தளர்ந்துள்ள போதும், அது நீறுபூத்த நெருப்பாக இன்றும் கனன்று கொண்டிருக்கும் அவலம் பற்றியெல்லாம் இவர் எழுதுகின்றார்.

ஹொண்டா சுப்பர்கப், சுசுக்கி, யமஹா, வேகோ எனப் பெற்றோரை வற்புறுத்தி வாங்கித் தெருவளப்போர் ஒருபுறம் பேஸ்புக், வாட்ஸ்அப், மெஸெஞ்ஜர், வைபர் என மூழ்கிக் கிடப்போர் மறுபுறம். இந்நவீன சாதனங்களுக்கு இளைய தலைமுறை அடிமையாகிக் கிடக்கிறதே என்ற ஆதங்கம் கவிஞருக்கு இருக்கின்றது. தனிமனித உறவுகளிலும் பண்பாடு பேண வேண்டிய அவசியம் வற்புறுத்தப்பட்டிருப்பதை வரவேற்கின்றேன்.

கவிஞர் சோ.பத்மநாதன்

ISBN 978-955-53908-5-9

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org